<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திரு.வி.சுரேஷ் உள்ளிட்ட 34 உதவி செயற்பொறியாளர்கள் சார்பாக தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியில் தற்காலிக பணி விதிகள், விதி 4(2)ல் செயற்பொறியாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட பணித்தகுதியை தளர்வு செய்து, 2009–10ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை

அரசாணை (ப) எண்.533 நாள் 14.10.09

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.15, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 25.1.2000.
2. அரசாணை (ப) எண்.455, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 20.7.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிஆணையரின் கடிதம் எண்.50576/08/இஇ1, நாள் 29.7.2009.

-----

**<u>ஆணை:-</u>**

மேலே 1ல் படிக்கப்பட்டஅரசாணையில், செயற்பொறியாளர் பணியிடத்திற்குத் தேவையான, தற்காலிகப் பணி விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அப்பணிவிதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் செயற்பொறியாளர் பதவிக்கு தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் பெயரைச் சேர்க்க தகுதி, பணிமூப்பு, துறைத்தேர்வு, இவற்றிற்கிடையில் உதவி செயற்பொறியாளராக (ஊவ) 5 ஆண்டுகள் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்று தகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியில், 2009–10 ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பணியிடத்திற்கு காலிப் பணியிட மதிப்பீடு 34 என நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், மேற்குறிப்பிட்ட செயற்பொறியாளர் பதவிக்கு 2009–10ஆம் ஆண்டிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 34 காலிப்பணியிடங்களுக்குத் தேவையான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயார் செய்ய முதுநிலையின்படி உள்ள உதவி செயற்பொறியாளர் பெயர்களைக் கொண்ட செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார். அச்செயற்குறிப்பில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தற்போது பணியாற்றும் 34 முதுநிலையில் உள்ள உதவி செயற்பொறியர்கள் அப்பணியிடத்தில் 5 ஆண்டுகள் பணித் தகுதியினை நிறைவு செய்யவில்லை என்றும் நிர்ணயிக்கப்பட்ட ஏனைய பணித்தகுதிகளை நிறைவு செய்துள்ளனர்

என்றும், ஆண்டிற்கு ரூ.7500 கோடி அல்லது மாவட்டந்தோறும் ரூ.250 கோடி அளவிற்கு பணிகள் மேற்கொள்ளும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அயற்பணியில் செயற்பொறியாளர்களை நிரப்பப்படுவதில் ஏற்படும் சிரமங்களினால், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கான பணிகளை செயல்படுத்துவதில் மிகுந்த அனுபவம் கொண்ட இத்துறையின் உதவி செயற்பொறியாளர்களைக் கொண்டு செயற்பொறியாளர் பணியிடங்களை நிரப்பலாம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் பெயரை சேர்க்க முதுநிலையின்படி தகுதியுடைய 34 உதவி செயற்பொறியாளர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்து, அவர்கள் தற்காலிகப் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட 5 ஆண்டு பணித்தகுதி பெற்றிருக்கவில்லை என்பதனால் அவர்களுக்குச் சாதகமாக பணித்தகுதி விதியினை நிர்வாக நலன் கருதி ஒரு சிறப்பு நிகழ்வாகத் தளர்த்தி ஆணையிட அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**4.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு விரிவாக ஆய்வு செய்தது. செயற்பொறியாளர் பணியிடத்துக்கான தற்காலிகப் பணி விதிகளின்படி முன்தகுதியாக, தகுதி, பணிமூப்பு, துறைத்தேர்வு இவற்றிற்கிடையில் உதவி செயற்பொறியாளராக (ஊ.வ) ஐந்து ஆண்டுகள் பணித்தகுதி தேவை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. நிர்வாக நலன் கருதி, தற்காலிகப் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட 5 ஆண்டுகள் பணித்தகுதி நிறைவு செய்யாத, தற்போது முதுநிலையிலுள்ள இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உதவிசெயற்பொறியாளர்கள் பொருட்டு தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சி பணியின் தற்காலிகப் பணி விதிகளில், விதி 4 (2)ஐ தளர்த்தி ஆணையிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

**5.** அவ்வாறே 1997ம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி இரண்டில் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 48ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.வி.சுரேஷ் உள்ளிட்ட 34 உதவி செயற்பொறியாளர்களின் பொருட்டு, செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு, உதவி செயற்பொறியாளராக ஐந்தாண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற பணித்தகுதி தொடர்பான தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிகப் பணி விதிகளில் செயற்பொறியாளர்களுக்கான விதி 4 (2)ஐ தளர்த்தி தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

**6.** மேலும், மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளில், விதி 4ன் கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து, 2009–10ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்ட 34 செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு ஆளுநரால் பணித்தகுதியிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ள இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.வி.சுரேஷ் உள்ளிட்ட 34 உதவி செயற்பொறியாளர்களின் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலினை அரசு வெளியிடுகிறது.

**7.** இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 34 நபர்களை செயற்பொறியாளர் பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் பணியிடத்தில்

காலிப்பணியிடங்கள் இல்லாத நிலையில், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி உதவி செயற்பொறியாளர்களாகப் பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

**8.** இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு. எண்.42995/09, நாள் 8.9.2009ல் அளிக்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள்
(வழி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–18 (கணக்கு / தணிக்கை)
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**<u>பிற்சேர்க்கை</u>**

<u>தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிக பணி விதிகளில் செயற்பொறியாளர்களுக்கான விதி 4(2)ஐ தளர்வு செய்து 2009–10ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிப்பதற்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல்</u>

| வ. எண் | பெயர் திருவாளர்கள்/ திருமதி | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பணிமூப்பு பட்டியல் எண் | உ.செ.பொ (ஊவ) ஆகப் பணியில் சேர்ந்த தேதி |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வி.சுரேஷ் | 21 | 2.3.2006 |
| 2 | எஸ்.ராஜா | 22 | 27.2.2006 |
| 3 | சி.சக்தி முருகன் | 24 | 2.3.2006 |
| 4 | வி.ராஜவேல் | 25 | 27.2.2006 |
| 5 | டி.ராமசாமி | 28 | 2.3.2006 |
| 6 | எஸ்.சேகர் | 30 | 2.3.2006 |
| 7 | எஸ்.முத்துசாமி | 32 | 27.2.2006 |
| 8 | கே.முருகன் | 33 | 24.2.2006 |
| 9 | ஏ.வரதராஜ பெருமாள் | 34 | 8.1.2007 |
| 10 | என்.பசுபதி | 35 | 5.1.2007 |
| 11 | கே.ஜோசப்பைன் நிர்மலா | 36 | 4.1.2007 |
| 12 | ஆர்.சந்திரசேகர் | 37 | 4.1.2007 |
| 13 | ஆர்.நாகைய்யன் | 41 | 5.1.2007 |
| 14 | எம்.இந்துமதி | 42 | 4.1.2007 |
| 15 | ஏ.ஹாசன் இப்ரஹிம் | 44 | 5.1.2007 |
| 16 | எஸ்.சடையப்பன் | 46 | 4.1.2007 |
| 17 | ஜி.அனுராதா | 47 | 5.1.2007 |
| 18 | ப்பி.மோகனசுந்தரம் | 48 | 3.1.2007 |
| 19 | எஸ்.சங்கர ஜோதி | 49 | 8.1.2007 |
| 20 | எஸ்.சீனிவாசன் | 50 | 8.1.2007 |
| 21 | ப்பி.ராமகிருஷ்ணன் | 52 | 4.1.2007 |
| 22 | ஏ.ஜி.சேதுராமன் | 54 | 5.1.2007 |
| 23 | எம்.செந்தில்குமார் | 55 | 4.1.2007 |
| 24 | எம்.கவிதா | 57 | 4.1.2007 |
| 25 | ஏ.சுஜாதா | 58 | 4.1.2007 |
| 26 | கே.பிரபாகர் | 59 | 5.1.2007 |
| 27 | ஏ.சுந்தரேசன் | 60 | 4.1.2007 |
| 28 | ஆர்.பிரேம்குமார் | 61 | 4.1.2007 |
| 29 | ஆர்.அருண் | 62 | 5.1.2007 |
| 30 | வி.செல்வராஜ் | 63 | 5.1.2007 |
| 31 | வி.வெங்கடேசன் | 64 | 5.1.2007 |
| 32 | எஸ்.ஏழிசைசெல்வி | 65 | 5.1.2007 |
| 33 | என்.குமார் | 66 | 4.1.2007 |
| 34 | ஏ.முருகன் | 67 | 4.1.2008 |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்